**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

CC.No. 10/2020

| | | |
|---|---|---|
| Deposition of Witness for PW | : | 4 |
| Name (திரு/திருமதி) | : | யாகுலமேரி |
| Father's Name/ Husband's Name | : | தேவராஸ் |
| Village & Taluk | : | கொம்மேடு |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 70 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.07.2025**

எதிரி ஆஜர்,

**முதல் விசாரணை–**

1. அ.சா.1 (குழந்தை ஏசு), என் அண்ணன் ஆவார். அ.சா.2 (அல்லேலுயா மேரி) என் அண்ணி ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 2018ம் வருடம் ஒரு நாள் நான் எனது நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது அ.சா.3 (ஜார்ஜ்) என்பவர் எனக்கு போன் செய்து குழந்தையேசு மற்றும் ஆஜர் எதிரி(பத்தி) ஆகியோர்கள் அ.சா.1ன் நிலத்தில் அடித்துக்கொண்டதாக எனக்கு தகவல் சொன்னார். அதன் பேரில் நான் வந்து பார்த்தபோது எனது அண்ணன் தலையில் கட்டுக்கட்டிக் கொண்டிருந்தார். அவருக்கு தலையில் ரத்தம் வந்து கொண்டிருந்தது. அவரை செஞ்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக நானும், எனது அண்ணியும் சேர்த்தோம். இந்த வழக்கு சம்பந்தமாக காவர்கள் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

குழந்தையேசும் மற்றும் பத்திநாதன் ஆகியோர்கள் அடித்துக்கொண்டது தொடர்பாக குழந்தை யேசு மீது எதிரி புகார் அளித்தார் என்றால் சரிதான். மேற்படி புகாரின் பேரில் அ.சா.1ன் மகன் இளரவசு, மற்றும் போக்சோ என்பவர் மீது வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றிய விவரம் தெரியாது. ஆனால் கேள்விப்பட்டேன். காவலர்கள் என்னை விசாரிக்கவில்லை என்றால்

சரிதான். ஜார்ஜ் எனக்கு நேரடியாக போன் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்தபோது அங்கில்லை என்றால் சரிதான். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் என் உறவின்ரகள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 தான் எதிரியை அடித்து காயம்படுத்தினார் என்றாலும் அதன் பேரில் எதிரி அ.சா.1 என்மீது அளித்த புகாரில் இருந்து தப்பிக்க வேண்டி இந்த பொய் புகார் எதிரி மீது அ.சா.1 கொடுத்துள்ளார் என்றாலும், நான் அ.சா.1க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–Vidhya,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

CC.No. 10/2020

| | | |
|---|---|---|
| Deposition of Witness for PW | : | 5 |
| Name (திரு/திருமதி) | : | தேவதாஸ் |
| Father's Name/ Husband's Name | : | லோகநாதன் |
| Village & Taluk | : | கொம்மேடு |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 70 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.07.2025**

எதிரி ஆஜர்,

**முதல் விசாரணை–**

1. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையெழுத்தினை கடந்த 2018ம் வருடம் ஒரு நாள் காலை சுமார் 11.00 மணியளவில் நானும் செந்தில் என்பவரும் அ.சா.1ன் சண்டை நடந்த நிலத்தின் இடம் சென்றிருந்தேம். அங்கு அனந்தபுரம் காவலர்கள் மற்றும் ஊர் கிராம நிர்வாக அலுவலர்கள் ஆகியோர்கள் வந்திருந்தனர். வந்து அளவு அளந்தனர். அப்போது நானும், செந்திலும் கையொப்பம் செய்தோம். காவலர்கள் என்னை விசாரிக்கவில்லை. மேற்படி **பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. காவலர்கள் என்னிடம் எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் பெற்றனர் என்றால் சரிதான். காவலர்கள் என்னிடம் கையொப்பம் பெற்ற தாளில் என்ன எழுதினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.**

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.